

கண்காட்சியில்

# இராமாயணக் காட்சி

[illegible]

உங்களுக்கு எம்மாதிரி ஓவியம் வரைய முடியும்?

இரண்டிலும் எனக்கு ஈடுபாடு உண்டு. ஆறு ஆண்டுகள் சென்னையில் படித்துப் பட்டம் பெற்றேன். இந்தியாவிலும் இலங்கையிலும் விரிவாகச் சுற்றுப் பயணம் செய்து கலைச் செல்வங்களைக் கண்டுகளித்திருக்கிறேன்.

ரசிகர்கள் எத்தகைய படங்களை விரும்புகின்றனர்?

சென்னையில் நடந்த ஒரு கண்காட்சியில் நான் வரைந்த கண்ணகி மதுரையை எரிக்கும் காட்சியும், மனுநீதிச் சோழன் நீதி வழங்கும் காட்சியும் இடம் பெற்றது. அதனை வாங்கி டில்லியிலுள்ள நமது தூதரகத்தில் வைத்திருக்கின்றனர். பினாங்கில் நடந்த கண்காட்சியில் ஆனந்த நடனமாடினார் என்ற பாடலுக்கான அபிநயக் காட்சிகளை ஒரே படத்தில் சித்தரித்திருந்தேன். காளிதாசனின் சாகுந்தலக் காட்சியொன்றையும் வரைந்திருந்தேன். இரண்டையும் ஒரு டாக்டர் தம்பதிகள் வாங்கினர்.

நவீன ஓவியம் தவிர வேறு புதிய முறை எதிலும் ஈடுபட்டிருக்கிறீர்களா?

சலவைக் கல்லில் வரைய முடியும். இதற்குத் தனி வண்ணத்தைப் பயன்படுத்துகிறேன். மின்சார அடுப்பில் 900 சென்டிகிரேடு உஷ்ணத்தில் அதை வைக்க வேண்டும். சூடு ஆற ஒரு நாளாகும்.

பேட்டியளித்தவர் மலேசிய ஓவியர் திரு சையது தாஜுடின், கோலாலம்பூர் மேடான் துவாங்கு [அக்பர் உணவு விடுதி] அருகில் உள்ள சமாட் கலைக் கூடத்தில் இவரது ஓவியக் கண்காட்சி தற்போது நடந்து கொண்டிருக்கிறது.

மாயமானை இராமர் துரத்திக் கொண்டு போவது முதல் அனுமார் இலங்கையை எரிக்கும் வரை 27 அடிக்கு 5 அடி அளவில் வரைந்துள்ள ஓவியம் இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது. இதை வரைந்து முடிக்க அவருக்கு ஈராண்டுகள் ஆயின. சலவை கல்லில் வரைந்த திருமண ஊர்வலம் ஓவியமும் இதில் இடம்பெற்றுள்ளது.

மாரா கல்லூரியில் பகுதிநேர ஓவிய ஆசிரியராகப் பணிபுரியும் திரு சையது தாஜுடின் ஒரு தமிழ் முஸ்லிம் ஆவார். அவர் கூறியது:

'இந்திய, இலங்கை ஓவியக் கலைகளைத் தனிப் பாடமாகப் பயின்ற மலேசியக் கலைஞர்கள் குறைவு. கலைஞர்களுக் அவர்களது படைப்ப களைக் கலை ஆர்வமுள் வர்கள் கண்டு பாராட் வதைக் காட்டிலு மன நிறைவளிப்ப வேறொன்றுமில்லை.'

உண்மைதான்! இவர படைப்புக்களைப் பார்த் மகிழ இன்று அல் நாளை சமாட் கலைக்கூட திற்குச் செல்லவேண்டு காலை 9மணி முதல் மா 5.30 மணிவரை க காட்சி திறந்திருக்கும்

'திரு தாஜு 'நேசன்' வாசகர்களு வரைந்தளித்த ஓவி தையே மேலே கா கிறீர்கள்.